# Plato's Thought is the Basis for the Political Philosophical Thought of the Renaissance: A Philosophical Study

Pulenthiran Nesan

M.Phil Student,
Post Graduate Institute of Humanities and Social Sciences,
University of Peradeniya, Sri Lanka.
pnesan92@gmail.com

**Abstract**

This study aims to examine how Greek Platonic thought formed the basis of political philosophical ideas that emerged during the Renaissance, which ushered in Europe following the Middle Ages. The problem with the study is how Plato's ideas were incorrectly followed beyond the Middle Ages to the Renaissance. The hypothesis of the study is that Renaissance thought appeared on the basis of Plato's political philosophical thought. Translations of Plato's original texts, research papers based on them, and other texts such as primary, secondary data sources, and descriptive analysis are used. Plato explained the clear foundations of Greek thought. The Renaissance political philosophers who arose on the basis of them and their ideas gained prominence during the Renaissance and formed the basis of the modern age.

**Key words:** Greek, Philosophy, Plato, Renaissance

**அறிமுகம்**

கிரேக்க மெய்யியல் சிந்தனையில் சோக்கிரட்டிஸிற்கு அடுத்ததாக முக்கியம் பெறும் மெய்யியலாளராக பிளேட்டோ காணப்படுகின்றார். சோக்கிரட்டிஸினால் விட்டுச் செல்லப்பட்ட பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்ததோடு, அவரது அறிவார்வத்தை உள்வாங்கி தனது தத்துவத்தையும் வளர்த்துக்கொண்டார் கிரேக்கத்தின் தத்துவத்தொடர்ச்சி இவரைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக அரிஸ்ரோட்டலியச் சிந்தனைகளிலும் தாக்கம் செலுத்தியது. பிளேட்டோவின் நேரடி மாணவனாகக் காணப்படும் அரிஸ்ரோட்டிலினது கருத்துக்களும், பின்னாளில் அரசியலிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ரஸல் இத்தொடர்பினை கூறுகையில், ''அரிஸ்ரோட்டில் பிளேட்டோவின் சிந்தனைகளின் வாரிசு. 13ஆம் நூற்றாண்டு வரைக்குமான கிறிஸ்தவ இறையியலும் மெய்யியலும் எவ்விதத்தில் நோக்கினாலும் அரிஸ்ரோட்டிலியச் சிந்தனையைவிட பிளேட்டோனியச் சிந்தனைகளுக்கே அதிகம் கடன்பட்டிருந்தன'' என்கின்றார் (அனஸ். எம், எஸ். எம்., மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை, 2006, பக் - 41).

குடியரசு, சட்டம், அரசியல்ஞானி போன்றன இவரது பிரதான படைப்புக்களாகும். இதில் ‘குடியரசு’ கி.மு 380 இல் எழுதப்பட்டது. இந் நூலானது இலட்சிய அரசு ஒன்றினைக் கட்டமைக்கும் பாங்கிலே எழுதப்பட்டிருந்தது. இது மக்கள் நலனை முதன்மைப்படுத்தியதாகக் காணப்படுகிறது. ஓர் நல்ல சிறந்த மக்கள் நலம் சார்ந்த அரசு எவ்வாறு செயற்படும், செயற்படவேண்டும் என்பதற்கான சட்டதிட்டங்களை அமைத்துக் கொடுப்பது. பலவிதமான ஆட்சி முறை பற்றிச் சிந்தனை செய்த பிளேட்டோ நேர்மையான உண்மையாகவே நீதியின் பாற்பட்ட ஓர் அரசு எவ்வாறு காணப்படும் என்ற கற்பனையில் உருவகப்படுத்தி அதன் செயற்பாட்டிற்கான வழிமுறைகளை முன்வைத்து இருக்கிறார். இவ் குடியரசானது அக்காலத்திலே கிரேக்கத்தில் காணப்பட்ட அரசியல் நிலைமைகள், மக்களின் வாழ்க்கை முறை, நீதிமுறைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புதியதோர் மாற்றத்தினை அரசியலில் ஏற்படுத்த அரசியல் ஞானம் மிக்க அரசனையும், ஆட்சி முறையையும் ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சியாக இந்நூலினை உருவாக்கினார்.

**ஆய்வின் நோக்கம்:** இவ் ஆய்வானது மத்திய காலத்தினை தொடர்ந்து ஐரோப்பாவிலே புதுயுகத்தினை ஏற்படுத்திய மறுமலர்ச்சிக் காலத்திலே தோன்றிய அரசியல் மெய்யியல் கருத்தாக்கங்களிற்கு எவ்வாறு கிரேக்க பிளேட்டோனிய சிந்தனைகள் அடிப்படையாக அமைகின்றது என்பதனை ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை:** பிளேட்டோவின் சிந்தனைகள் எவ்வாறு மத்திய காலத்தினையும் தாண்டி மறுமலர்ச்சிக் காலத்திலே அவற்றின் கருத்துக்கள் திரிபடையாது பின்பற்றப்பட்டன என்பது ஆய்வின் பிரச்சினையாக உள்ளது.

**ஆய்வுக் கருதுகோள்:** பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகளின் அடிப்படையிலேயே மறுமலர்ச்சிக்கால சிந்தனைகள் தோன்னிறன என்பது ஆய்வின் கருதுகோளாகக் காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்:** பிளேட்டோவின் மூல நூல்களின் மொழி பெயர்ப்புக்கள், அவற்றை அடிப்படையாகக் கொண்டு வெளிவந்த ஆய்வு நூல்கள், பிற நூல்கள் போன்ற முதலாம் நிலை, இரண்டாம் நிலை தரவு மூலங்களும், விபரணப் பகுப்பாய்வு முறையும் பயன்படுகின்றது.

**பகுப்பாய்வு**

பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகள் தனித்துவம் வாய்ந்தவையாகும் அதுமட்டுமல்லாமல் அவரே முதன்முதலில் அரசியல் சிந்தனைகளை மெய்யியல் ரீதியான கண்ணோக்கில் பேசியவர். பிளேட்டோவின் சிந்தனைகள் கிரேக்க, மத்திய காலங்களில் மட்டுமல்லாமல் மறுமலர்ச்சி காலப்பகுதியிலும் செல்வாக்குப் பெற்றுக் காணப்பட்டதோடு அதுவே நவீனகால சிந்தனைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதை காணலாம். மறுமலர்ச்சிக் காலத்தில் பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகளின் தாக்கம் என்று கூறும்போது ஆழமான, விமர்சன ரீதியான சிந்தனைகளின் தோற்றம், கல்விமான்களின் தெரிவு, மக்களின் வாக்குரிமை மற்றும் வேறு பல உரிமைகளையும் குறிப்பிட முடியும். இவை அனைத்தும் பிளேட்டோவின் அரசியல் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டதே ஆகும்.

பிளேட்டோவின் குடியரசு என்ற நூலில் ஐந்து வகையான அரசியல் முறைகளை முன்வைத்தார் 1. பிரபுக்களின் ஆட்சி, 2. செல்வந்தர்களின் ஆட்சி, 3. குழு ஆட்சி 4. மக்களாட்சி, 5. கொடுங்கோல் ஆட்சி அதிலே பிரபுக்கள் ஆட்சி முறையைப் பற்றி நோக்குவோமானால் பிளேட்டோ பலதரப்பட்ட அரசாட்சி முறைகளை சமுதாயத்திற்கு முன்வைத்த போதிலும் அவரின் அடிப்படை விருப்பு பிரபுக்கள் ஆட்சி முறையாகும். அதாவது சமுதாயத்தில் உள்ள பல கலைகளிலும் சிறந்து விளங்கியவர்களும் மக்கள் அபிமானத்தை பெற்றவர்களும் மட்டுமே ஒரு ஒழுங்கான, நீதியான ஆட்சி முறையை அமைப்பதற்கு பொருத்தமானவர்கள் என்றும், உண்மையில் அப்படிப்பட்ட ஒரு ஆட்சி முறை அமைப்பும் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் நிம்மதியான வாழ்க்கையை கொடுக்கக் கூடியது என்ற மெய்யியல் கண்ணோட்டத்திலும் பிளேட்டோ சிந்தனை செய்யலானார். அதனை அமைப்பதற்காக அவர் அரசியலில் ஈடுபட்டதை குறிப்பாக தன்னுடைய கிரேக்க நாட்டு சாம்ராஜ்யத்தில் இருந்த அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் அண்மையிலுள்ள இத்தாலி நாட்டிற்கும் கிரேக்கத்திற்கும் பிரயாணம் செய்வதிலும் அரசியல் விடயங்களில் ஈடுபட்டதிலும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இவ் ஆட்சி மாறாத சட்ட வழக்குகளை கொண்டது. இதை ஒரு இலட்சிய ஆட்சி (Ideal state) முறையாகக் கண்டார்.

மக்கள் ஒன்றாகவும், அமைதியாகவும் வாழ்வதன் மூலம் இலட்சிய அரசு என்ற விடயம் சாத்தியம் எனப் பிளேட்டோ கருதினார். இக் கருத்தை சார்ள்ஸ் வெரேக்கர் குறிப்பிடுகையில்:

“ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் ஒன்றுகூடி இன்பமுடன் வாழும் இயல்பை மனிதன் கொண்டிருக்கின்றான் என்று பிளேட்டோ வற்புறுத்திக் கூறியிருப்பது அவரின் சிந்தனைச் சிதறல்களில் முக்கியமானது எனப் பிற்கால அரசியலாளர்கள் கருதுகின்றனர். ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழும் முறையை அறிந்துகொள்ளத் தவறுவதனாலேயே மனிதன் தனது இலட்சிய வாழ்க்கையை அடைய முடியாமல் தவிக்கின்றான் என்றும், ஒழுங்காகச் சிந்திப்பதன் மூலம் வாழ்க்கைமுறை எது என்பதை அவன் கண்டுகொள்ள முடியும் என்றும் பிளேட்டோ கருதினார்” என்கின்றார் (சார்ள்ஸ் வெரேக்கர், அரசியற் கொள்கைகளின் வளர்ச்சி, 1973, பக் - 4).

பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகளின் வளர்ச்சிப்போக்கைப் பற்றி நோக்குவோமாயின். அரசியல் மெய்யியலாளர்கள் அரசியலின் ஆரம்பத்திலும், அதன் வளர்ச்சியிலும் அதன் தன்மை, அமைப்பு, நோக்கம் செயற்பாடு, அரசியல் கொள்கைகள் ஆகியவற்றில் கருத்தாழம் மிக்கவர்களாக காணப்பட்டனர். பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் வளர்ச்சிக்கு ஓர் வரலாற்று நிகழ்ச்சி அடிப்படையாய் அமைந்து அத் தத்துவங்கள் ஒரு அரசியல் நிறுவனமாக கட்டியெழுப்பப்பட்டன. அவர் காலத்தில் கிரேக்க நாடு பல நகர பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு இடையே அடிக்கடி யுத்தங்களும் ஏற்பட்டன. இந்நிலையில் அவர் இவ்வகை குறைபாடுகளில் இருந்து விடுவிக்கவும் அதனால் மக்கள் சமாதானமாகவும் முழுமையான ஒரு வளர்ச்சியை எவ்வாறு அடையலாம் என்று எடுத்துக்காட்டினார். ஸ்பாட்டாவின் அரசியல் விதிமுறைகளையும், அரசியல் நிறுவன அமைப்புகளையும் பிளேட்டோ ஒழுக்கவியலை உதவியாகக் கொண்டு சீரிய ஆட்சி முறை வளர்ச்சி அடையச் செய்வதற்கு வழிவகுத்தார். இவரது இச் சிந்தனைகள் மறுமலர்ச்சிக்

காலத்தில் பெரிதும் செல்வாக்குப் பெற்றதோடு, அடுத்து வந்த நவீன காலத்திலும் முக்கியம் பெற்றன.

மறுமலர்ச்சிக் காலம் என்பதை மெய்யியல் கலைக்களஞ்சியம் ''இத்தாலி தேசத்தில் 14ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்து பின்பு ஐரோப்பா முழுவதும் பரவிய ஒரு கலாச்சார இயக்கம்'' என விளக்குகிறது. உலக வரலாற்றில் மனிதனை விழிப்படையச் செய்வதில் பல ஆழமான நகர்வுகளுக்கு காரணமாக அமைந்த இக்காலத்தை தன்னகத்தே பல நன்மைகளையும் தீமைகளையும் கொண்ட வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாகவும், புதிய பார்வையாகவும், பல நோக்குகளுக்கு ஒரு முன்னோடியாகவும், வழக்காறுகளுக்கும், கொள்கைகளுக்கும் ஒரு முடிவாகவும் கொள்ளலாம். இக் காலம் பற்றி சோ. கிருஸ்ணராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''இக்காலத் தத்துவம் உண்மையைக் கண்டறிவதில் பிறிதின் சார்பற்று முன்னேறுகின்றது. மனித அறிவையே (சநளழெ) யாவற்றினும் சிறந்ததாகக் கருதுவதனால் பகுத்தறிவுவாதத் தன்மையும் (rationalistic) அகப்புற இயல்புகளை இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாலன்றி, இயற்கை முறையிலே விளக்குவதால் இயற்கைக்கொள்கைத் தன்மையையும் (naturalistic), புதிய விஞ்ஞானங்களோடு, - சிறப்பாக புற உலகைப் பற்றிய விஞ்ஞானத்துடன், தொடர்புடையதாக இருப்பதனால் விஞ்ஞானத் தன்மையும் (scientific) இக்கால மெய்யியல் பெற்றிருக்கின்றது'' (கிருஸ்ணராஜா, சோ., ஐரோப்பிய மெய்யியல் வரலாறு, 2018, ப.8).

மேலும், 17ஆம் நூற்றாண்டின் பல்வேறு மனித வளர்ச்சிகளுக்கும் அடிப்படையாக அமைந்த இக் காலம் அரசியல், மெய்யியல் சிந்தனைகளின்பால் உணர்வுகளை இங்கு நோக்கல் சிறந்ததாகும். குறிப்பாக மக்களை தத்தம் சிந்தனைகளில் மேம்பட செய்ததுடன், அவர்களை தமது வாழ்க்கை அனுபவங்கள், பகுத்தறிவுடன் வேறுபட்ட கோணங்களில் சிந்திக்க வைத்தது இக்காலமே ஆகும். அதாவது கிரேக்க காலத்தில் தோன்றிய அரசு பற்றிய பிளேட்டோவின் சிந்தனைகள் மறுமலர்ச்சிக் காலத்தில் முக்கியம் பெறலானது.

பிற்காலத்தில் ரூசோ, ஹொப்ஸ், லொக் முதலியோர் வகுத்த சமூக ஒப்பந்தக் கோட்பாட்டுக்கும் ''பயன்வழிக் கோட்பாடு என்று ஜான் ஸ்டுவர்ட் மில் என்ற சிந்தனையாளர் வகுத்த கோட்பாட்டுக்கு ஆதாரம் பிளேட்டோ மனித உடம்போடு அரசை ஒப்பிட்டுக் கூறிய கருத்துக்கள் சென் தோமஸ் அக்குவைனாஸ், ரூஸோ, பிளான்ட்ச்லி, ஹெகல், ஹெர்பர்ட் ஸ்பென்சர், T.D கிரின் முதலிய சிந்தனையாளர்கள் பிற்காலத்தில் அரசின் உடல் ஒப்புமைக் கோட்பாட்டை (Organic Theory of the State) வரைவதற்கு ஆதாரமாக அமைந்தன''. சூரியநாராயணன், மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள் (பிளேட்டோ முதல் கி.பி. 15ஆம் நூற்றாண்டு வரை), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976, பக் - 58) மேலும் மார்க்ஸின் பொதுவுடைமைக் கோட்பாட்டுக்கும் ஆதாரங்களான கருத்துக்களைக் கூறியவர் பிளேட்டோவாகும்.

தனது குடியரசு என்ற நூலில் சிறிய ஆட்சி முறையைப் பற்றி விவரிக்கின்றார். மேலும் Utopia என்னும் நூலில் ஆட்சியாளர், படையினர், உழைப்பாளிகள் என மூன்று பிரிவினரை முன்வைக்கின்றார். இருந்தும் ஆட்சியாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்கள் கல்விமான்களாகவும் ஒழுக்கத்தில் சிறந்தவர்களாகவும் உருவாக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். ஏனென்றால் இப்படியானவர்களையே மக்கள் தங்கள் தலைவர்களாக தெரிவு செய்ய விரும்புகின்றனர். அதேவேளை ஆட்சியாளர்களும் ஒவ்வொரு தனி மனிதனையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் அவரின் கருத்து.

வரலாற்று நிகழ்ச்சிகளின் ஆதாரங்களைக் கொண்டு முதலில் சக்கரவர்த்தி ஆட்சியே தோன்றியது எனக் கருத கூடியதாக இருக்கின்றது. அது முடிவுக்கு கொண்டுவரப்பட்டு பிரபுக்கள் ஆட்சி அறிமுகம் செய்யப்பட்டது. இது மக்களாட்சியாக மாறிய பொழுது மக்களின் தொடர்ச்சியான பங்களிப்பு காணப்படுகின்றது. இவ் ஆட்சி முறையில் சுதந்திரமான விவாதங்களும், ஒருவரை ஒருவர் மரியாதை செய்து மற்றவர்களுடைய நியாயங்களுக்கு மதிப்பு கொடுக்கும் பண்புகளும் காணப்படுகின்றன. இதிலிருந்து பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகள் ஒவ்வொரு மனிதனின் அடிப்படையான ஆவலில் வெளிப்படும் நீதி நெறியான, அமைதியான ஆட்சிக்கு வழிவகுக்கும் எனத் தோன்றுகிறது.

அவர் முன்வைத்த பிரபுக்கள் ஆட்சி முறை ஒரு இலட்சியமேயொழிய யதார்த்த உலகில் நிறை அனுபவமாக இருக்க முடியாது. எனவே பெரும்பாலும் அது கோட்பாடான அளவிலேயே இருக்கும் நடைமுறையில் காண்பது கடினம் எனப் புலப்படுகின்றது.

பிளேட்டோவின் சிந்தனைகளின் செல்வாக்கினால் மறுமலர்ச்சி காலத்தின் அரசியல் மெய்யியல் தத்துவங்கள் புத்துயிர்ப்பு பெற முன்னோடிகளாக இருந்தவர்கள் நிக்கோலா மாக்கியவல்லி (கி.பி. 1469 – 1527), கம்பனெல்லா (கி.பி. 1597 - 1634), ஜீன் போடின் (கி.பி. 1530), அல்தூதிஸ் (கி.பி. 1557) மற்றும் குறோசியஸ் போன்று பல முக்கியமானவர்கள் ஆவர். இவர்கள் அனைவரினதும் சிந்தனைகளின் கருப்பொருளாக அரசு என்பதே காணப்படுகின்றது. இவர்கள் முன்வைத்த அரசு பற்றிய எண்ணங்களே நாளடைவில் மறுமலர்ச்சிக் காலத்தில் அரசு பற்றிய ஓர் ஆழமான விழிப்புணர்வு ஏற்பட காரணமாயிற்று எனலாம். மறுமலர்ச்சிக் காலத்தில் புராதன கிரேக்க உரோம தத்துவஞானிகளின் சிந்தனைகள் புத்துயிர் பெற்றன. மறுமலர்ச்சி என்பதன் அர்த்தம் கிரேக்க ரோம சிந்தனைகளின் மீள் பிறப்பும், அறிவின் எழுச்சியும் ஆகும். புராதன தத்துவங்களை படித்த மறுமலர்ச்சி கால அரசியல் மெய்யியலாளர்கள் திருச்சபையின் ஆதிக்கத்திலிருந்து நாட்டையும் அரசியலையும் பிரித்தெடுத்து அவர்களின் வேறுபட்ட நிலைப்பாட்டையும் முன்வைத்தார்கள். அத்தோடு நாட்டின் அரசியல் எதையும் சாராத ஒரு நிலைப்பாட்டை கொண்டிருக்க வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்தினார்கள். ஆகவே, பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகள் மறுமலர்ச்சிக் கால அரசியல் தத்துவங்களில் தாக்கம் ஏற்படுத்தின என்பது உறுதியாகும்.

பிளேட்டோவின் அரசியல் மெய்யியல் சிந்தனைகளையும், மறுமலர்ச்சிக்கான சிந்தனைகள் தத்துவங்களையும் கோட்பாடாகவும் நடைமுறையிலும் ஒப்பிட்டு நோக்குமிடத்து, சில ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் காணக்கூடியதாக இருக்கின்றது. மாக்கியவல்லி

எல்லாவற்றிற்கும் பிளேட்டோவின் அரசியல் ஆட்சிமுறையை அதி சிறந்ததாக கணித்தார். அது அரசியல் அறிஞர்களும் நாட்டை ஆளக்கூடிய பாதுகாவலர்களும் இணைந்த ஒரு இறுக்கமான நன்கு பயிற்றப்பட்ட அமைப்பாக இருந்ததால் இலட்சிய ஆட்சி முறைக்கு இட்டுச் செல்லும் எனச் சிந்தித்தார். சமூகத்தின் பொது நலனை கருத்தில் கொண்டு அரசியல் நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்காக பிளேட்டோ முன்வைத்த மாறாத பிரபுக்கள் ஆட்சி முறையானது சர்வாதிகாரப் போக்குடையதல்ல என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் காலப்போக்கில் அதில் ஏற்பட்ட ஒழுங்கீனங்களையும் அதிகார துஃபிரயோகங்களையும் நிவர்த்தி செய்வதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்கும் முயற்சித்த மக்கியவல்லி அது ஒரு சர்வாதிகார ஆட்சி முறையாக உருப்பெற வழிவகுத்தார்.

பிளேட்டோவின் அரசியல் தத்துவமும் அதன் நடைமுறைகளும் மறுமலர்ச்சி காலத்திலும் தொடர்ந்து நினலப்பதை, குறிப்பாக பல நாடுகளில் மக்களாட்சி இருந்ததன் மூலம் காணலாம். ஆனால் எந்தளவிற்கு அவரின் தத்துவத்திற்கு ஏற்ற சீரிய ஆட்சிமுறை நடைபெற்றது என்பது கேள்விக்குறியே! மேலும், ஜீன் போடின், குறோசியஸ் ஆகியோர் மக்கள் தமக்கு ஏற்ற தலைவர்களை தெரிவு செய்ய உரிமை உடையவர்கள் என்று கூறுவதில், பிளேட்டோவின் அடிப்படை அரசியல் தத்துவம் வெளிப்படுவதைக் காணலாம். மேலும் அவரைப் போன்று இவர்களும் ஆட்சியாளருக்கு அதி உன்னத அரசியல் ஞானம் (wisdom) தேவை என வற்புறுத்தியதோடு, ஆட்சியாளர்கள் கடவுளின் பிரதிநிதிகள் என்ற கொள்கையை முன்வைத்தனர். ஆனால் அரசனின் ஆட்சி நாட்டு மக்களுக்கு நன்மை விளைவிக்காத போது நாட்டு மக்கள் தலைவனுக்கு எதிராக எதிர்த்து வாதிட உரிமை உண்டு என்ற தமது கொள்கையை உறுதியாக முன்வைத்தனர். போடின், அல் தூஸ் ஆகியோர் மக்கள் தமது விருப்பப்படியே வேறு ஒரு தலைவரை தெரிவு செய்யலாம் என்ற கொள்கையை முன்வைத்தனர். இக்கருத்துக்கள் பிளேட்டோவின் தத்துவங்களுடன் நெருங்கிய தொடர்பு உடையனவாக காணப்படுகின்றன. குறோசியஸ் மக்களால் தெரிவு செய்யப்படும் முறையை ஆதரித்தாலும், தலைவன் கடவுளின் பிரதிநிதி என்றும் அதனால் அவரை பதவியிலிருந்து விலக்க முடியாது என்ற தத்துவத்தையும் முன்வைத்தார்.

நிக்கோலா மக்கியவல்லிக்கு அடுத்தபடியாக வாழ்ந்த மறுமலர்ச்சிக்கால மெய்யியலாளர்கள் அவரது கோட்பாட்டுக்கு சாதகமாகவும் பாதகமாகவும் அபிப்பிராயம் தெரிவித்தனர். சர்வாதிகார ஆட்சியில் மனித நற்பண்புகள் முக்கியத்துவம் பெறுவதில்லை. ஆனால், பிளேட்டோவின் குடியரசு என்னும் நூல் சுதந்திரமான நாட்டைப் பற்றியும் சிறந்த ஆட்சியை பற்றியும் விரிவாகக் கூறுகின்றது. நீதி எது அநீதி எது என்று எடுத்துக் காட்டும் தகுதி பிரபுக்கள் ஆட்சி முறைக்கு மட்டும்தான் உண்டு. மறுமலர்ச்சிக்கால மெய்யியலாளரான கொம்பனல்லா பிளேட்டோவின் தத்துவங்களுக்கு மாறான சக்கரவர்த்தி ஆட்சிமுறையை விரும்பினார். மேற்குறிப்பிட்ட ஆய்வுகளிலிருந்து அரசியல் சிந்தனைகளும் மறுமலர்ச்சிக்கான அரசியல் மெய்யியல் சிந்தனைகள் சில ஒற்றுமைகள் வேற்றுமைகள் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. எவ்வாறாயினும் தத்துவங்களிலும் மக்களின் உரிமை சமத்துவம் அரசியல் நீதிக்கும் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்கலாம்.

**முடிவுரை**

கிரேக்க காலம் பல்வேறுபட்ட அறிவியல்களும் தோற்றம் பெற அடிப்படையானது. அவ்வாறே கிரேக்க மெய்யியலும் பல்வேறுபட்ட கோணங்களிலான ஆராய்ச்சிகளை முன்வைத்ததோடு, அரசு, அரசியல் தொடர்பான கருத்தாக்கங்களும் எழுச்சிபெற அடிப்படையானது. பிளேட்டோவும் சோக்கிரட்டிய சிந்தனைகளின் வாரிசாக காணப்பட்டதோடு, அரசு பற்றிய தெளிவான புரிதலை தனது எழுத்துக்களின் மூலம் முன்வைத்துள்ளார். இடைக்காலத்தின் ஆரம்பத்தில் மெய்யியல் கிறிஸ்தவ திருச்சபையின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. அவ்வேளையில் மெய்யியலின் தலையாய பணி அறிவுக்குப் பொருத்தமான வாதங்களைக் கொண்டு கிறிஸ்தவ திருச்சபையின் நம்பிக்கைகளைப் பாதுகாப்பதாகவே இருந்தது. இச் சிந்தனைகள் மறுமலர்ச்சிக் காலத்தில் தகர்க்கப்பட்டன, அறிவொளிச் சிந்தனைகள் தோற்றம் பெற்றன. அரசு, அரசன் தொடர்பான பலமான கருத்தாக்கங்கள் தோற்றம் பெற்றன. திருச்சபை, மதகுருமார் அரசின் அதிகாரத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டனர். அவ்வாறான மறுமலர்ச்சிக்காலச் சிந்தனைகளுக்கு பிளேட்டோவின் உறுதியான அரசியல் கருத்தாக்கங்கள் அடைப்படையாக அமைந்தமையினை இவ் ஆய்வு தெளிவாக விளக்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**உசாத்துணை நூற்பட்டியல்**


Barker,E., (1959). *The Political Thought of Plato and Aristotle,* Dover Publications, INC.

Crossman, R.H.S., (1937). *Plato To-day,* London George Allean and Unwin Ltd.

Reeve (trans), C.D.C., (2004). *Plato Republic,* Hackett Publishing Company, Inc, Indianapolish / Cambridge.

அனஸ், எம். எஸ். எம். (2003). *மெய்யியல் அறிமுக உரைகள்,* பண்பாட்டு ஆய்வு வட்டம், பேராதனை,

……………………………. (2006) *மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.

இராமனுஜசாரி, (2015). *பிளேட்டோவின் குடியரசு*, சாகித்திய அகாதெமி, சென்னை,

சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன், (1979). *கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு,* தொகுதி - அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.

சார்ள்ஸ் வெரேக்கர், (1973). *அரசியற் கொள்கையின் வளர்ச்சி* (Translated and Published in Ceylon), கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

சூரியநாராயணன், (1976). *மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள் (பிளேட்டோ முதல் கி.பி 15ஆம் நூற்றாண்டு வரை)*, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

நடராசன்,பெ., (1973). *அரசியல் கோட்பாடுகள்:* தழிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு,

…………….. (1991). *கல்வியின் தத்துவ அடிப்படைகள்* பகுதி - மகரகம: தேசிய கல்வி நிறுவகம்.

முத்துமோகன். ந., (2000). *ஐரோப்பியத் தத்துவங்கள்,* காவ்யா வெளியீடு, பெங்க;ர்.

ஜமாஹிர். பீ. எம்., (2010). *மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும்,* நதா வெளியீடு, கண்டி, இலங்கை,